

# குழந்தை பாக்கியம் மற்றும் சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு


جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# பகுதி 1

# குழந்தைப் பாக்கியத்தைக் கேட்கும் துஆக்கள்

# குழந்தைப் பாக்கியத்தைக் கேட்கும் துஆக்கள் 1

## ஜகரிய்யா(அலை) அவர்களின் துஆ

رَبِّ لَا تَذَرْنِيْ فَرْدًا وَّاَنْتَ خَيْرُ الْوٰرِثِيْنَ

ரப்பி லா ததர்னி ப(f)ர்தவ் வ அந்த ஹைருல் வாரிஸீன்

என் இறைவா! நீ என்னை (சந்ததியில்லாமல்) ஒற்றையாக விட்டு விடாதே! நீயோ அனந்தரங்கொள்வோரில் மிகவும் மேலானவன்

திருக்குர்ஆன் 21:89

# குழந்தைப் பாக்கியத்தைக் கேட்கும் துஆக்கள்

2

## ஜகரிய்யா(அலை) அவர்களின் துஆ

رَبِّ هَبْ لِىْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً
اِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ

ரப்பி ஹப்லீ மில்லதுன்க துர்ரியத்தன்
தய்யிபதன் இன்னக ஸமீஉத் துஆ

இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய்

திருக்குர்ஆன் 3:38

# குழந்தைப் பாக்கியத்தைக் கேட்கும் துஆக்கள்

3

## இப்ராஹீம்(அலை) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ هَبْ لِيْ مِنَ الصّٰلِحِيْنَ

ரப்பி ஹப்லீ மினஸ்(ص)ஸாலிஹீன்

என்னுடைய இறைவா! நீ எனக்கு ஸாலிஹான ஒரு நன்மகனைத் தந்தருள்வாயாக !

திருக்குர்ஆன் 37:100

# குழந்தைப் பாக்கியத்தைக் கேட்கும் துஆக்கள் 4

## அதிகமதிகம் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடிக் கொண்டே இருங்கள்

أَسْتَغْفِرُ اللَّهَ

## அஸ்தக்( غ )பி (ف)ருல்லாஹ்

**நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்.**

மேலும், "நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள், நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன் என்றும் கூறினேன். "(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். **அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான்.** இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான்.

**திருக்குர்ஆன் 71:10-12**

# பகுதி 2

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

1

## மர்யம்(அலை) அவர்களின் தாய் கேட்ட துஆ

وَإِنِّي أُعِيذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

வ இன்னீ உஈதுஹா பிக வ துர்ரிய்யதஹா மினஷ் ஷை(த்)தானிர் ரஜீம்

மேலும் நான் அக்குழந்தைக்காகவும் அதன் வருங்கால சந்ததிகளுக்காகவும் சபிக்கப்பட்ட ஷைத்தா(னின் தீங்கி)னை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

திருக்குர்ஆன் 3:36

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

2

## இப்ராஹிம்(அலை) அவர்களின் துஆ

رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ اٰمِنًا وَّاجْنُبْنِىْ

وَبَنِىَّ اَنْ نَّـعْبُدَ الْاَصْنَامَ ؕ

ரப்பிஜ்அல் ஹாதல் பலத ஆமினவ் வஜ்னுப்னி
வ பனிய்ய அன்னஃபுதல் அஸ்னாம்

என் இறைவனே! இந்த ஊரை அச்சம் தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்னையும், என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!

திருக்குர்ஆன் 14:35

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

3

## இப்ராஹிம்(அலை) அவர்களின் துஆ

رَبِّ اجْعَلْنِىْ مُقِيْمَ الصَّلٰوةِ

وَمِنْ ذُرِّيَّتِىْ ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ ۝٤٠

ரப்பிஜ்அல்னீ முகீமஸ் ஸலாத்தி வமின்
துர்ரியத்தி ரப்பனா வதகப்பல் துஆ

‘(என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியில் உள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!”

திருக்குர்ஆன் 14: 40

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

4

رَبَّنَا هَبْ لَنَا مِنْ اَزْوَاجِنَا وَذُرِّيّٰتِنَا
قُرَّةَ اَعْيُنٍ وَّاجْعَلْنَا لِلْمُتَّقِيْنَ اِمَامًا

ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா
வ துர்ரிய்யாத்தினா குர்ரத்த அஃயுனி(வ்)
வஜ் அல்னா லில் முத்தகீன இமாமா

எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தி உடையவர்களுக்கு எங்களை இமாமாக ஆக்கியருள்வாயாக !

திருக்குர்ஆன் 25:74

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

5

رَبِّ اَوْزِعْنِیْۤ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِیْۤ
اَنْعَمْتَ عَلَیَّ وَعَلٰی وَالِدَیَّ وَاَنْ اَعْمَلَ
صَالِحًا تَرْضٰىهُ وَاَصْلِحْ لِیْ فِیْ ذُرِّیَّتِیْ
اِنِّیْ تُبْتُ اِلَیْكَ وَاِنِّیْ مِنَ الْمُسْلِمِیْنَ

ரப்பி அவ்ஸி(z)ஃனீ அன் அஷ்குர நிஃமதகல்லதீ அன்அம்த அலய்ய வ வஅலா வாலிதய்ய வஅன் அஃமல ஸாலிஹன் தர்ழா(dha)ஹு வ அஸ்லிஹ்லீ ஃபீ துர்ரிய(த்)தீ இன்னீ துப்து இலைக்க வ இன்னீ மினல் முஸ்லிமீன்.

இறைவனே! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்த அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்தவும், உன்னுடைய திருப்தியை அடையக் கூடிய ஸாலிஹான நல்ல அமல்களைச் செய்யவும் எனக்கு அருள் பாலிப்பாயாக! என்னுடைய சந்ததியையும் ஸாலிஹானவர்களாக சீர்படுத்தியருள்வாயாக! நிச்சயமாக நான் உன்பக்கமே திரும்புகிறேன்; அன்றியும், நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவனாக இருக்கின்றேன்"

**திருக்குர்ஆன் 46:15**

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

6

بِسْمِ اللهِ اللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

பிஸ்மில்லாஹி, அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மா ரஸக்தனா

இறைவன் திருநாமத்தால் (உடலுறவு கொள்கிறேன்.) இறைவா ஷைத்தானின் தீங்குகளை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக! நீ எங்களுக்கு வழங்கும் சந்ததிகளையும் ஷைத்தானை விட்டும் பாதுகாப்பாயாக!

**சிறப்பு**

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்.
உங்களில் ஒருவர் தம் மனைவியுடன் இல்லற உறவு கொள்ள விரும்பும்போது, இந்த துஆவைப் பிரார்த்தித்து, அந்த உறவில் அத்தம்பதியருக்கு விதிக்கப்பட்டபடி குழந்தை பிறந்தால், அக்குழந்தைக்கு ஒருபோதும் ஷைத்தான் தீங்கிழைப்பதில்லை.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 7396

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

7-A

اللَّهُمَّ فَقِّهْهُ فِي الدِّينِ

اللَّهُمَّ عَلِّمْهُ الكِتابَ

اللَّهُمَّ عَلِّمْهُ الحِكْمَةَ

அல்லாஹும்ம ப(ஃ)க்கிஹ்ஹு பி(ஃ)த்தீன்

அல்லாஹும்ம அல்லிம்ஹுல் கிதாப

அல்லாஹும்ம அல்லிம்ஹுல் ஹிக்மத

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 143, புகாரி 75, புகாரி 3756

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள் 7-B

யா அல்லாஹ் அவருக்கு மார்க்கத்தில்
விளக்கத்தைக் கொடுப்பாயாக !

யா அல்லாஹ் ! அவருக்கு வேதத்தைக் (குர்ஆனைக்)
கற்றுக் கொடுப்பாயாக !

யா அல்லாஹ் ! அவருக்கு ஞானத்தைக்
கற்றுக் கொடுப்பாயாக !

**குறிப்பு:**

**சிறுவராக இருந்த இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் ஓதிய இந்தத் துஆவை உங்கள் குழந்தைகளுக்காகவும் ஓதி வாருங்கள்.**

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 143, புகாரி 75, புகாரி 3756

# சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கான துஆக்கள்

8

## இப்ராஹீம்(அலை) மற்றும் முஹம்மது(ﷺ)அவர்கள் இருவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஓதிய துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ كُلِّ
شَيْطَانٍ وَّهَامَّةٍ وَّمِنْ كُلِّ عَيْنٍ لَّامَّةٍ

**அஊது பி கலிமாதி(ت)ல்லாஹித் தா(ت)ம்ம மின் குல்லி ஷை(ش)தா(ط)னிவ்வ ஹாம்ம வமின் குல்லி ஐனில்லாம்ம.**

அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்"

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3371